மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகரத்தையொட்டிய புறவழிச் சாலை அமைத்திடும் பணி அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

தூண்டில் வளைவு

955*—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி மீனவ கிராமத்தில் கடலரிப்பைத் தடுத்திட தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்கள் நலம் பயக்கும் திட்டங்கள் எதுவாக இருந்தாலும், நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் பயனாக திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிக்காக ரூபாய் 489.20 இலட்சங்களுக்கு மத்திய அரசின் நிதிக் குழுவிலிருந்து நிதியுதவி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையினை ஏற்று உவரி மீனவ கிராம மக்களுக்கு 4 கோடியே 89 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில்*

2011 செப்டம்பர் 5]

தூண்டில் வளைவு பாலம் கட்ட அனுமதியளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, மீன்பிடி தடைக் காலத்தில் வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியமைக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல் எனது தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களான கூட்டப்புளி, பெருமணல், இடிந்தகரை, தோமையார்புரம், கூத்தங்குழி, கூட்டப்பனை, கூடுதாழை மற்றும் ஜார்ஜ் நகர், மிக்கேல் நகர் ஆகிய கிராமங்களில் ஏற்படும் கடல் அரிப்பினால் ஏற்பட்ட பாதிப்புகளை கடந்த 24—6—2011 அன்று மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டார்கள். எனவே, உயிரைப் பணயம் வைத்து மீன்பிடித் தொழில் செய்யும் மீனவ மக்கள் பயன்பெறும் வகையில் இந்தப் பகுதியிலும் தூண்டில் வளைவு அமைத்துத் தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கடந்த ஆட்சியில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூபாய் 26 கோடியே 68 இலட்சம் செலவில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம், சுனாமியால் பாதிக்கப்பட்ட எனது தொகுதிக்குட்பட்ட கடற்கரையோர கிராம மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. அதில் டெக்னிகல் குறைபாடுகள் இருப்பதால் இத்திட்டம் சரியாகச் செயல்படவில்லை. அதாவது, சுமார் 40 இலட்சம் லிட்டர் தண்ணீர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மூலக் கேள்வி தூண்டில் வளைவு குறித்தது. நீங்கள் குடிதண்ணீர், மற்ற பிரச்சினைகள் பற்றிக் கேட்டால், எப்படி அமைச்சரால் பதில் சொல்ல முடியும்? தூண்டில் வளைவு பற்றிக் கேளுங்கள். நம்புதாளை கிராமத்தை விட்டுவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்ளாட்சித் துறைக்கு சம்பந்தமான

கேள்வி என்பதால் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேள்விகளைக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 81, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

தொழிற்சாலை

***268—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரம் பகுதியில் இரப்பர் தொழிற்சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்—விடைகள் நேரத்தில் பதிலளிப்பதற்கு எனக்கு அனுமதியளித்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உங்களுடைய அனுமதியோடு அம்மா அவர்களுக்கு இன்னொரு முறை நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 2—9—2011 அன்று மக்களுக்குக் குறைந்த கட்டணத்திலே கேபிள் டி.வி.—யைத் தொடங்கி, வருமா, வராத என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளியை வைத்து, தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) செய்வதைச் சொல்வோம், (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதைச் செய்வோம், அதையும் உடனே செய்வோம் என்று நிறைவேற்றி, ஒரு குடும்பம் கொள்ளையடித்ததற்கு முற்றுப்புள்ளி வைத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாகவும், குறிப்பாக அதிகம் பாதிக்கப்பட்ட கோவை மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றியைக் கூறிக்கொண்டு எனது பதிலை அளிக்கிறேன்.